# TNPSC GROUP I / II - PRELIMINARY

# INDIAN POLITY - WORKSHEET

## ஒன்றியம் மற்றும் அதன் எல்லைகள்

இந்திய அரசியலமைப்பு பகுதி I-ல் சரத்து 1முதல் 4 வரை இதைக் குறிப்பிடுகிறது

**மாநிலங்களின் ஒன்றியம் :**

- அரசியலமைப்பு சரத்து 1ல் **இந்தியா அதாவது பாரதம்** – மாநிலங்களின் கூட்டாட்சி எனப்படாமல் **'மாநிலங்களின் ஒன்றியம்'** எனக் குறிப்பிடபடுகிறது.

- இது இரண்டு காரியங்களைக் கையாளுகிறது. ஒன்று 'நாட்டின் பெயர்' மற்றொன்று 'நாட்டின் அரசியல் முறை' ஆகும்.

- நாட்டிற்கு பெயர் வைக்கும் விவகாரத்தில், அரசியல் சட்டமன்றசபையில் ஒருமனம் ஏற்படவில்லை. சிலர் பாரம்பரிய பெயரான 'பாரதம்' என்றும் பிறர் நவீன பெயரான 'இந்தியா' என்றும் பரிந்துரைச் செய்தனர். எனவே சட்டமன்றக் குழு இரண்டையும் சேர்த்து 'இந்தியா, அதாவது பாரதம்' என ஏற்றுக்கொண்டது.

- Dr.B.R.அம்பேத்கர்,'மாநிலங்களின் ஒன்றியம்' (Union of States) என்ற சொற்றொடர் மாநிலங்களின் கூட்டமைப்பு என்பதை விட ஏன் முன்னுரிமை பெற்றது என்பதை இரண்டு காரணங்களால் விளக்கினார்.

  1. இந்திய மாநில கூட்டமைப்பு (Federation of States),அமெரிக்க கூட்டமைப்பு போன்று மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தாலானது இல்லை.
  2. இந்திய மாநில கூட்டமைப்பில் மாநிலங்கள் ஒன்றிய கூட்டமைப்பிலிருந்து விலக உரிமை இல்லை.

- இந்திய கூட்டமைப்பு என்பது ஒரு ஒன்றியம் ஏனெனில் இவற்றை அழிக்க முடியாது.
- இந்திய நாடானது ஒருங்கிணைந்த முழு நிர்வாக அமைப்பு, நிர்வாக வசதிக்காக பல மாநிலமாக பிரிக்கப்பட்டுள்ளது.

சரத்து 1ல் உள்ள இந்திய பகுதி 3 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. மாநிலங்களின் எல்லை
2. மாகாணங்களின் எல்லை
3. எந்த நேரத்திலும் இந்திய அரசுக்கு அதன் பரப்பை/நிலப்பகுதியை பெறுவதற்கு அதிகாரம் உள்ளது.

- ♣ அரசியலமைப்பு முதல் அட்டவணையில் மாநிலங்களின் பெயர்கள் மற்றும் அதன் எல்லை விரிவாக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ♣ **தற்போது 28 மாநிலங்கள் (States), 8 ஒன்றிய மாகாணங்கள் (Union Territories) உள்ளன.**
- ♣ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைத் தவிர அனைத்து மாநிலத்திற்கும் ஒரே மாதிரியான அரசியலமைப்பு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- ♣ பகுதி XXIல் மகாராஷ்டிரா, குஜராத், நாகலாந்து, அஸ்ஸாம், மணிப்பூர், ஆந்திரப்பிரதேசம், சிக்கீம், மிசோரம், அருணாச்சல பிரதேசம் மற்றும் கோவா மாநிலத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் மற்ற மாநிலங்களை காட்டிலும் அதிகமாக உள்ளன.
- ♣ மேலும் 5, 6வது அட்டவணையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பகுதிகளுக்கு சிறப்பு சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- ♣ இந்தியப் பகுதிகள், இந்திய ஒன்றியங்கள் என்னும் சொல்லை விட பரந்த வெளிபாடு உடையது.

- ♦ இந்திய பகுதிகள்: மாநிலங்கள், மாகாணங்கள் மற்றும் எதிர்காலத்தில் இந்திய அரசால் கைப்பற்றப்படும் பகுதிகளை உள்ளடக்கியது.
- ♦ இந்திய ஒன்றியங்கள்: மாநிலங்களை மட்டும் உள்ளடக்கியது.

- ♣ மாநிலங்கள் கூட்டாட்சியின் கீழ் மத்திய அரசுடன் தங்கள் அதிகாரத்தை பகிர்ந்துக்கொள்கிறது. யுனியன் பிரதேசங்கள் மத்திய அரசால் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது.
- ♣ இந்தியா, இறையாண்மையை பறைசாற்றும் விதமாக அயல்நாட்டு பகுதிகளை, உலக விதிமுறைக்கு உட்பட்டு பெற்றுக் கொள்ளலாம். (அதாவது ஒப்பந்தம், வாங்குதல், பரிசாக பெறுதல், குத்தகை அல்லது பொது வாக்கெடுப்பு முறையில் நிலப்பகுதியை இந்தியா பெறலாம்). ஆக்கிரமிப்பு (அங்கீகரிக்கப்பட்ட ஆட்சியாளரால் இதுவரை காலியாக உள்ள நிலம்), கைப்பற்றுதல். எ.கா: கோவா, டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, புதுச்சேரி, சிக்கீம்.
- ♣ **சரத்து 2** பாராளுமன்றத்திற்கு விதிமுறைக்கு உட்பட்டு தேவை என்று கருதினால் **இந்திய ஒன்றியத்தில் புது மாநிலத்தை உருவாக்க** அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில மறுசீரமைப்பில் பாராளுமன்றத்தின் அதிகாரம்
- ♣ சரத்து 2 – பாராளுமன்றத்தின் இரு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

(a) இந்திய ஒன்றியத்தில் புது மாநிலங்களை இணைக்கும் அதிகாரம்

(b)மாநிலங்கள் உருவாக்கும் அதிகாரம்

a. ஏற்கனவே இருக்கும் மாநிலங்களை இந்திய ஒன்றியத்தில் இணைப்பதைக் குறிக்கும்

b. புதிய மாநிலங்களை உருவாக்குதலைக் குறிக்கும்.

**முக்கிய குறிப்பு**

| | |
|---|---|
| சரத்து (Article 2) | இந்திய ஒன்றியத்தில் இல்லாத புது மாநிலத்தை இணைப்பது (அ) உருவாக்குவது ஆகும். |
| சரத்து 3<br>(Article 3) | ஏற்கனவே இந்திய ஒன்றியத்தில் உள்ள பரப்பளவை மாற்றியமைப்பது ஆகும். அதேபோல் இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்கள் தங்களுக்குள்ளே பரப்பளவை மாற்றி சரி செய்வது. |

APOLLO STUDY CENTRE

♣ **சரத்து 3ன் படி பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்**

- ஒரு மாநிலத்தின் பரப்பளவை பிரித்தோ அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது ஒரு பகுதி அல்லது மாநிலத்தின் ஒரு பகுதியை மற்றொரு மாநில பகுதிகளோடு இணைத்தோ ஒரு புது மாநிலத்தை உருவாக்கலாம்.
- எந்த ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பளவை அதிகரிக்கலாம்.
- எந்த ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பளவை குறைக்கலாம்.
- எந்த ஒரு மாநிலத்தின எல்லையை மாற்றலாம்.
- எந்த ஒரு மாநிலத்தின் பெயரையும் மாற்றலாம்.

**மாநில உருவாக்கத்தில் சரத்து (3) இரண்டு நிபந்தனைகளை குறிப்பிடுகிறது.**

மேற்கூறிய மாநில எல்லை தொடர்புடைய மசோதாவை பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு பிறகே அறிமுகப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி இந்த வகை மசோதாவை பரிந்துரை செய்வதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றத்தின் கருத்தை குறிப்பிட்ட காலவரையில் பெற வேண்டும்.

♣ ஜனாதிபதி மாநில சட்டமன்றத்தின் கருத்தை ஒப்புதலோ (அ) தள்ளுபடியோ செய்யலாம்.

- பாராளுமன்றத்தில் இவ்வகை மசோதா ஒப்புதலுக்கு பிறகு, மாநில சட்டமன்றத்துக்கு ஒவ்வொரு முறையும் புதிய பொதுஜன வாக்கெடுப்பு நடத்த அவசியம் இல்லை.

- ஒன்றிய மாகாணத்திற்கான இவ்வகை மசோதாவிற்கு பாராளுமன்றவே முடிவு எடுக்கலாம்.

- இந்தியாவில் பாராளுமன்றத்திற்கு இந்திய அரசியல் வரைபடத்தை அதன் விருப்பத்திற்கு இணங்க மாற்றும் அதிகாரம் உள்ளது.

- ஆதலால் அரசியலமைப்பில் இந்தியாவின் பிராந்திய ஒருமைபாடு, ஒரு மாநிலங்களில் தொடர் நிலைபாடு கேள்வி குறியாகிறது.

- இந்தியாவை அழிக்கக்கூடிய மாநிலங்களை கொண்ட **'அழிக்க முடியும் மாநிலங்களை கொண்ட அழிக்க முடியாத ஒன்றியம்'**என்று அழைக்கலாம்.

- ஆனால் ஐக்கிய அமெரிக்க நாட்டில் இந்த நிலைபாடு தலைகீழாக அமைந்திருக்கும்.

- அமெரிக்க கூட்டாட்சி அரசு, மாகாணங்களின் ஒப்புதல் இன்றி மாநில பரப்பளவை மாற்றவோ, புதிய மாநிலம் உருவாக்கவோ முடியாது.

- ஆதலால் அமெரிக்கா அரசாங்கம் அழிக்க முடியாத மாநிலங்களை கொண்ட அழிக்க முடியாத ஒன்றியம் என்று அழைக்கப்படுகிறது.

- அரசியலமைப்பு, **சரத்து 4ன்** படி சரத்து 2 மற்றும் 3ல் உருவாக்கப்பட்ட மாநிலங்களின் சட்டத்தை அரசியலமைப்பே அறிவிக்கும் அதிகாரத்தை குறிப்பிடுகிறது.

- இவை சரத்து 368ன் கீழ் அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் வராது.

- அதாவது இவ்வாறு உருவாக்கப்பட்ட சட்டங்களை நிறைவேற்ற சாதாரண சட்டமன்ற செயல்முறை மற்றும் சாதாரண பெரும்பான்மை போதுமானது.

- சரத்து 3ன்படி பாராளுமன்றத்திற்கு மாநிலத்தின் பரப்பளவை குறைக்கும் அதிகாரம் உள்ளது.

- ஆனால் 1960ல் மத்திய அரசு பெருபரி ஒன்றியத்தை (Berubari Union) பாகிஸ்தானுக்கு கொடுக்க அனுமதிக்காத போது அரசியல் கலவரமூண்டது.

- ஆதலால் வெளிநாட்டுக்கு இந்தியா நிலப் பகுதியை தரும் பட்சத்தில் சரத்து 368ல் கூறப்பட்டது. போல **அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி** தர வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

- ♣ இதன் விளைவாக 1960ல் 9வது அரசியலமைப்பு சட்டத்திருத்தப்படி, இந்தியாவில் மேற்கு வங்க பெருபரி பகுதி பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்டது.

- ♣ 1969ல் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி **இந்தியா மற்றும் அண்டை நாடுகளுக்கிடையேயுள்ள எல்லையில் பிரச்சனையை தீர்க்க அரசியலமைப்பு சட்டத்திருத்தம் தேவையில்லை. அது நிர்வாக நடவடிக்கை மூலம் செய்யலாம் எனக்கூறியது.**

**வங்காள தேசத்துடனான பிராந்திய பரிமாற்றம்:**

- ♣ இந்தியா மற்றும் வங்காள தேச அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா சில பிராந்தியங்களை கைப்பற்றவும் சில பிராந்தியங்களை வங்காள தேசத்திற்கு மாற்றம் செய்யவும் **100 வது சட்டத்திருத்தச் சட்டம் (2015)** இயற்றப்பட்டது.

- ♣ இந்த ஒப்பந்தத்தின் படி இந்தியா தனது 111 குடியிருப்புகளை வங்காள தேசத்திற்கும் வங்காள தேசம் தனது 51 குடியிருப்புகளை இந்தியாவிற்கும் பரிமாற்றம் செய்து கொண்டன.

- ♣ மேலும் இந்த ஒப்பந்தத்தில் சில முக்கிய உடைமைகளைப் பரிமாற்றுதல் மற்றும் வரையறுக்கப்படாத 6.1 கி.மி எல்லைப்பகுதியை வரையறுத்தல் ஆகியவையும் அடங்கும்.

- ♣ இந்த மூன்று காரணங்களுக்காக, அரசியலமைப்பின் ஒன்றாவது அட்டவணையில் நான்கு மாநிலங்களுக்கான (அஸ்ஸாம், மேற்கு வங்காளம், மேகாலயா மற்றும் திரிபுரா) வகையங்கள் திருத்தம் செய்யப்பட்டது.

**மாநிலங்களும், மாகாணங்களும் உருவாகிய விதம்**

- ♣ இந்திய விடுதலையின் போது இந்திய பிரிட்டிஷ் மாகாணங்கள் மற்றும் இராஜ்ய மாகாணங்கள் தான் இருந்தன.

- ♣ இந்திய விடுதலை சட்டம் 1947ன்படி இரு விடுதலை நாடுகள் இந்திய மற்றும் பாகிஸ்தான் உருவாகியது.

- ♣ இச்சட்டம் இராஜ்ய மாகாணத்திற்கு 3 விருப்பங்களை அறிவித்தது.

- ♣ அவை இந்தியாவுடன் இணைவது அல்லது பாகிஸ்தானுடன் இணைவது அல்லது சுதந்திர மாகாணங்களாக இருப்பது.

- ♣ **சர்தார் வல்லபாய் படேல்** துணை பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பதவியேற்றவுடன் சுதேச அரசுகளின் ஒருங்கிணைப்பு தொடங்கியது. மூன்று பிரிட்டிஷ் வைசியராய்களுடன் பணியாற்றிய **வி.பி. மேனன்** படேலின் செயலாளராக பொறுப்பேற்று அதற்கான களப்பணிகளை மேற்கொண்டார்.

- இந்திய பரப்பளவில் இருந்த 552 இராஜ்ய மாகாணங்களிலிருந்து 549 இராஜ்யங்கள் இந்தியாவுடன் இணைந்தன.

- மற்ற 3 (ஹைதராபாத், ஜுனாகர் மற்றும் காஷ்மீர்) இந்தியாவுடன் இணைய மறுத்தன.

**மாநில மறுசீரமைப்பின் பின்னணி (Integration of Princely States)**

**ஜீனாகத்:**

- ஜீனாகத் நவாப் மூன்றாம் முகமது மகபத் காஞ்சி மற்றும் அவரின் திவான் ஷா் நவாஸ் பூட்டோ இந்தியாவுடன் இணைய மறுத்தனா். அந்த பகுதி மக்கள் பெரும்பாலோா் முஸ்லிம் அல்லாதோா். இருப்பினும் திவான் பூட்டோ ஜுனாகத்தை பாகிஸ்தானோடு ஆகஸ்ட் 15, 1947 அன்று இணைத்துவிட்டாா். இதனைக் கண்டித்து பொதுமக்கள் போராட்டங்கள் நடத்தினா். மேலும் திவானிடம் ஜீனாகத் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனா். இதனைத் தொடா்ந்து பிப்ரவரி 20, 1948 அன்று நடத்தப்பட்ட **பொது வாக்கெடுப்பின்படி** ஜீனாகத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

**ஐதராபாத்:**

- நிஜாம் மிா் ஒஸ்மான் அலிகான் சித்திக், ஏழாம் அசப் ஜா-வால் ஆட்சி செய்யப்பட்ட மிகப்பெரிய சுதேச அரசான ஐதராபாத் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய விரும்பவில்லை. பெரும்பாலும் இந்துக்களாக இருந்த தெலுங்கானா விவசாயிகள் கிளா்ச்சி செய்தபோது, அதை அடக்க தனது இராணுவத்தைப் பயன்படுத்தி வன்முறையைப் பிரயோகித்தாா். இறுதியில் செப்டம்பா் 1948 ல் இந்திய இராணுவம் **ஆப்பரேசன் போலோ (இராணுவ நடவடிக்கை)** மூலம் ஐதராபாத்தை கைப்பற்றி நாட்டின் மற்ற பகுதிகளுடன் இணைத்தது.

**காஷ்மீா்:**

- காஷ்மீா், ஹரிசிங் என்ற இந்து அரசரால் ஆட்சி செய்யப்பட்டது. காஷ்மீரில்., பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் இருந்ததால் அப்பகுதி, தங்கள் நாட்டோடு இணைந்துவிடும் என்று பாகிஸ்தான் நினைத்தது. பாகிஸ்தான் தொடா்ந்து அத்துமீறியதால், மகாராஜா ஹரிசிங் இந்தியாவிடம் இராணுவ உதவியை நாடினாா். இதற்காக அக்டோபா் 26, 1947 அன்று செய்யப்பட்ட **இணைப்பு ஒப்பந்தத்தின்** அடிப்படையில் ஜம்மு காஷ்மீா் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

**1950ல் அரசியலமைப்பு 4 பிரிவாக மாநிலங்களை பிரித்தது**

- **பகுதி A மாநிலங்கள்:** முன்பு இருந்த கவர்னரின் பரிட்டிஷ் இந்திய பகுதிகள் 9
- **பகுதி B மாநிலங்கள் :** முன்பிருந்த 9 இராஜ்ஜிய மாகாணங்கள்
- **பகுதி C மாநிலங்கள்:** முன்பிருந்த தலைமை ஆணையரின் சில பிரிட்டிஷ் இந்திய பகுதி மற்றும் சில இராஜ்ஜிய மாகாணங்கள் (மொத்தம்10 உள்ளன)
- **பகுதி D மாநிலங்கள்:** அந்தமான் நிக்கோபார் தீவுகள்

**மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு**

**விடுதலைக்கு முன்பு:**

♣ மொழி அடிப்படையில் மறுசீரமைப்பு என்பது 1917-ல் காங்கிரஸ் கட்சியால் தொடங்கப்பட்டது. குறிப்பாக, அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில் தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட பகுதிகளை இணைக்க அப்பகுதி காங்கிரஸ் தலைவர்கள் கோரினர்.

♣ 1895-ல் தொடங்கிய நீண்ட போராட்டத்திற்கு பின்னர் பீகார் மற்றும் ஒரிசா மாகாணத்திலிருந்து, **ஒரிசா** 1936ல் பிரிக்கப்பட்டது. இதுவே மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்ட முதல் மாநிலமாகும்.

**தார் குழு மற்றும் JVP குழு:**

♣ சுதந்திரத்திற்கு பிறகு மொழிவாரி மாநிலங்கள் அமைக்க கோரிக்கைகள் எழுந்தன.

♣ அரசியலமைப்பு மொழிவாரியாக மாநிலங்களை அமைக்க நவம்பர் 1947ல் **S.K. தார் தலைமையில்** குழு அமைத்தது.

♣ இந்தக் குழு டிசம்பர் 1948 இல் சமர்ப்பித்த அறிக்கையில் மொழி வாரியாக இல்லாமல் நிர்வாக வசதியின் அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைக்க பரிந்துரைத்தது.

♣ காங்கிரஸின், ஜெய்பூர் மாநாடு 1948 S.K.தார் குழுவின் பரிந்துரைப்படி 3 நபர் குழுவை அமைத்தது. இவை புகழ்பெற்ற JVP குழு என்று அழைக்கப்பட்டது.

♣ அந்த 3 பேர்: ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சித்தராமையா ஆவார்.

♣ இக்குழு 1949 ஏப்ரலில் மொழிவாரியாக மாநிலங்கள் அமைவதை நிராகரித்து அறிக்கை சமர்ப்பித்தது.

APOLLO STUDY CENTRE

- JVP குழு மொழிவாரி அடிப்படை மாநிலம் அமைவதை நிராகரித்தாலும், **1953 அக்டோபரில்**, கட்டாய அடிப்படையில் இந்திய அரசாங்கம் **முதல் மொழிவாரி மாநிலத்தை 'ஆந்திரா'** அமைத்தது.

- தெலுங்கு மொழி பேசும் பகுதிகள் மதராஸ் மாகாணத்திலிருந்து மொழிவாரி அடிப்படையில் ஆந்திரா என்ற தனி மாநிலமாக பிரிக்கப்பட்டது.

- பொட்டி ஸ்ரீராமலு மொழிவாரி மாநிலத்தினை அமைக்கக்கோரி 56 நாள் உண்ணாவிரத போராட்டம் இருந்து இறந்ததாலும், பெரும் கிளர்ச்சியாலும் இந்திய அரசுக்கு மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில் பிரிக்கும் கட்டாயம் ஏற்பட்டது.

**பாசில் அலி குழு** (Fazil Ali Committee)

- மொழிவாரியாக ஆந்திரா அமைக்கப்பட்டதை தொடர்ந்து பெரும்பான்மையான இந்திய பகுதிகள் மொழிவாரி மாநிலங்கள் அமைக்க கோரிக்கை எழுந்ததை அடுத்து 1953ல் **பாசில் அலி தலைமையில்** 3 நபர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

- மற்ற 2 நபர்கள் கே.எம். பனிக்கர் மற்றும் ஹெச்.எம்.குன்ஸ்ரு.

- இக்குழு மொழிவாரி மாநிலத்தை அமைக்கலாம் என பரிந்துரை செய்து 1955 செப்டம்பரில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

- ஆனால், ஒரு மொழி ஒரு மாநிலம் என்ற கொள்கையை மறுத்தது. இவற்றின் பரிந்துரையில் நான்கு முக்கிய அம்சங்கள்

    1. மறுசீரமைக்கப்பட்ட மாநிலங்கள் நாட்டின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதாக பாதுகாப்பை வலுப்படுத்துவதாக அமைய வேண்டும்.

    2. மோழி மற்றும் கலாச்சார ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும்.

    3. நிதி, பொருளாதாரம் மற்றும் நிர்வாக செயல்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

    4. நாட்டுக்காகவும் மற்ற நாட்டு மக்களின் நலனிற்காகவும் நல்ல திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

- இக்குழு மாநிலங்கள் 4 வகையாக பிரிக்கப்படுவதை நிராகரித்தது மற்றும் 16 மாநிலங்கள் 3 மத்திய நிர்வாக மாகாணங்களை அமைக்க பரிந்துரை செய்தது.

- இந்திய அரசு இக்குழுவின் பரிந்துரையை ஏற்று சற்று மாற்றங்கள் செய்து அமுல்படுத்தியது. முாநில மறு சீரமைப்பு சட்டம் (1956), ஏழாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் (1956), பகுதி C மாநிலங்கள் நீக்கப்பட்டன.

- சில மாநிலங்கள் இணைக்கப்பட்டது. முடிவாக **1956, நவம்பர், 1ல் 14 மாநிலங்களும், 6 மாகாணங்களும் உருவாக்கப்பட்டது.**

**1956க்கு பிறகு உருவான மாநிலங்கள் மற்றும் மாகாணங்கள்**

| வ. எண் | ஆண்டு | உருவாகிய மாநிலம் | மாநிலம் உருவான விதம் |
|---|---|---|---|
| 1. | 1960 | மகாராஷ்டிரா, குஜராத் | பம்பாய் மாகாணம் மராத்திய மொழி பேசும் மகாராஷ்டிரா மாநிலமாகவும்,குஜராத்தி மொழி பேசும் 15வது மாநிலமாகவும் குஜராத் பிரிந்தது - **பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம், 1960** |
| 2. | 1961 | தாத்ரா மற்றும் நாகர் | 1954 வரை போர்ச்சீசியர்களின் ஆதிக்கத்தில் இருந்து இந்த ஹவேலி மாகாணம் பின்பு இந்திய ஆதிக்கத்திற்கு வந்தது.<br>1961ல் 10வது அரசியல் அமைப்பு சட்டத்திருத்தத்தின்படி இவை இந்திய மாகாணமாக மாற்றப்பட்டது. |
| 3. | 1987 | கோவா, டாமன் மற்றும் டையூ | 1961ல் காவல் துறை நடவடிக்கையால் போர்ச்சீசியரிடமிருந்து மூன்று பகுதியை இந்தியா கைப்பற்றியது. 1962ல் 12வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி இவை மாகாணமாக அமைக்கப்பட்டது. பின்பு, 1987ல் கோவா மாநில அந்தஸ்தை பெற்றது. டாமன் மற்றும் டையூ மத்திய மாகாணமாக மாற்றப்பட்டது. 2019-இல் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ஒன்றிய பிரதேசமும் டாமன் மற்றும் டையூ ஒன்றிய பிரதேசமும் இணைக்கப்பட்டு, டாமனைத் தலைநகராக்கி ஒரே ஒன்றிய பிரதேசமானது (ஜனவரி 26, 2020 முதல் நடைமுறைக்கு வந்தது) |
| 4. | 1962 | புதுச்சேரி | முந்தைய பிரான்ஸ் காலனி ஆதிக்கத்திலிருந்து புதுச்சேரி, காரைக்கால், மாஹி மற்றும் யாணம் பகுதிகள் 1954ல் இந்தியாவிற்கு பிரான்ஸால் தரப்பட்டது. 1962ல் 14வது சட்டத் திருத்தப்படி இவை மத்திய மாகாணமாக மாற்றப்பட்டது. |
| 5. | 1963 | நாகலாந்து | நாகா மலை மற்றும் அஸ்ஸாமிலுள்ள துவான்சாங் பகுதிகள் இணைந்து 1963ல் நாகலாந்து 16வது மாநிலமாக உருவாகியது. **நாகாலாந்து மாநிலச் சட்டம், 1962** |

APOLLO STUDY CENTRE

| | | | |
|---|---|---|---|
| 6. | 1966 | ஹரியானா | பஞ்சாப் மாநிலம பஞ்சாப் மொழி பேசும் (1966, ஷா குழு பரிந்துரைப்படி) பஞ்சாப் மாநிலமாகவும் இந்தி மொழி பேசும் ஹரியானா மாநிலமாகவும் (17வது மாநிலம்) இரண்டாக பிரிந்தது. **பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம், 1966** |
| 7. | 1971 | இமாச்சலபிரதேசம் | மத்திய மாகாணமாக இருந்த இமாச்சலப்பிரதேசம் 18வது இந்திய மாநிலமாக மாற்றப்பட்டது. **புதிய இமாச்சல பிரதேச மாநிலச் சட்டம், 1970** |
| 8. | 1972 | மணிப்பூர், திரிப்புரா | மத்திய மாகாணமாக இருந்த மணிப்பூர், திரிப்புரா 19வது மற்றும் மேகாலயா மற்றும் 20வது மாநிலமாக மாற்றப்பட்டது. அஸ்ஸாமில் துணை மாநிலம் அல்லது சுயாட்சி மாநிலமாக இருந்த மேகாலயா 21வது இந்திய மாநிலமாக மாற்றப்பட்டது. அஸ்ஸாமில் இருந்து மிசோரம் மற்றும் அருணாச்சல பிரதேசம் மத்திய மாகாணமாக பிரிந்தது. **வடகிழக்கு மாநில மறுசீரமைப்புச் சட்டம், 1971** |
| 9. | 1974 | சிக்கீம் | 35வது அரசியலமைப்பு சட்டததிருத்தப்படி 1974ல் சிக்கீம் துணை மாநில அந்தஸ்தை பெற்றது. பின்பு 1975ல் 36வது அரசியலமைப்பு சட்டத்திருத்தப்படி சிக்கீம் இந்தியாவின் 22வது மாநிலம் என்ற அந்தஸ்தை பெற்றது. இந்த சட்டததிருத்தம் முதல் மற்றும் 4வது அட்டவணையில் சில திருத்தங்கள் செய்து புது சரத்து 371F ஐ (சிக்கீம் மாநில நிர்வாகத்திற்கான சிறப்பு அந்தஸ்து) சேர்த்தது. **புதிய சிக்கிம் மாநிலச் சட்டம் 1975** |
| 10. | 1987 | மிசோரம், அருணாச்சல பிரதேசம் மற்றும் கோவா | 1987ல் மிசோரம், அருணாச்சல பிரதேசம் மற்றும் கோவா முறையே 23வது, 24வது, 25வது இந்திய மாநிலமாக மாற்றப்பட்டது. **அருணாச்சல பிரதேச மாநிலச் சட்டம் மற்றும் மிசோரம் மாநிலச் சட்டம் 1986** |
| 11. | 2000 | சட்டீஸ்கர், உத்திரகண்ட், ஜார்கண்ட் | சட்டீஸ்கர் மத்திய பிரதேசத்திலிருந்தும், உத்திரகண்ட் மற்றும் ஜார்கண்ட் உத்திரபிரதேசத்திலிருந்தும் மற்றும் ஜார்கண்ட் பீகார் மாநிலத்திலிருந்தும் முறையே 26வது, 27வது மற்றும் 28வது மாநிலங்களாக உருவாக்கப்பட்டது. **மத்திய பிரதேசம் மறுசீரமைப்புச் சட்டம், உத்திர பிரதேசம் மறுசீரமைப்புச் சட்டம் மற்றும் பீகார் மறுசீரமைப்புச் சட்டம், 2000** |
| 12. | 2014 | தெலுங்கானா | ஆந்திர பிரதேச மாநிலத்திலிருந்து தெலுங்கானா 10 |

| | | | |
|---|---|---|---|
| | | | மாவட்டங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அடுத்து 10 வருடம் வரை ஆந்திர பிரதேசம் மற்றும தெலுங்கானாவிற்கு பொது தலைநகரம் ஹைதராபாத் ஆகும். **ஆந்திர பிரதேசம் மறுசீரமைப்புச் சட்டம் 2014**<br><br>பொதுவாக தெலுங்கானா மசோதா என்று அழைக்கப்படும் இந்த மசோதாவின் மூலம் ஆந்திர பிரதேசம் ஆந்திரா மற்றும் தெலுங்கானா என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அமைக்கப்பட்டு ஜூன் 2, 2014 அன்று புதிய மாநிலமாக தெலுங்கானா உருவாக்கப்பட்டது, |
| 13. | 2019 | ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் | 2019 வரை, ஜம்மு காஷ்மீர் தனிப்பட்ட அரசியலமைப்புடன் சரத்து 370 இன் படி சிறப்புரிமை பெற்று வந்தது. இந்த சிறப்புரிமை குடியரசுத்தலைவர் ஆணையாகிய "அரசியலமைப்பு ஆணை (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு பொருந்துகை) 2019" ஆல் நீக்கப்பட்டது. இருப்பினும் சரத்து 370, இந்திய அரசியலமைப்பின் உரையில் தொடர்ந்து இருக்கிறது. **ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019.** இதன்படி 1956ல் 14 மாநிலங்கள் 6 மாகாணங்களாக இருந்த இந்திய நாடு தற்போது 28 மாநிலங்கள், 8 மாகாணங்கள் கொண்டதாக இருந்தது. |

- மேலும் பல பகுதி மக்களிடமிருந்து தனி மாநில கோரிக்கை எழுகின்ற காரணத்தினால் மொழிவழி மாநில சீரமைப்பு செயல்பாடுகள் தொடர்ந்து வருகின்றது.

1. ஹாரித் பிரதேஷ் (மேற்கு உத்திர பிரதேசம்)
2. பூர்வாஞ்சல் (கிழக்கு உத்திரப் பிரதேசம்)
3. போடாலாந்து (வடக்கு அசாம்)
4. சௌராஷ்டிரா (தெற்கு குஜராத்)
5. கூர்க்காலாந்து (வட மேற்கு வங்காளம்)
6. விதர்பா (கிழக்கு மகாராஷ்டிரா)
7. கோசல் (மேற்கு ஒடிசா)

**பெயர்களின் மாற்றம்**

- 1950ல் ஒருங்கிணைந்த மாகாணம் உத்திர பிரதேசம் என பெயர் மாற்றப்பட்டது.
- 1969ல் மதராஸ் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது.
- 1973ல் மைசூர் கர்நாடகா என்று பெயர் மாற்றப்பட்டது.
- 1973ல் லட்சத்தீவு, மனிகாய் மற்றும அமிந்திவி தீவுகள் லட்சத்தீவுகள் என்று பெயர் மாற்றப்பட்டது.
- 1992ல் டெல்லி ஒன்றிய மாகாணம் டெல்லி தேசிய தலைநகர் மாகாணமாக 69வது சட்டத் திருத்தப்படி பெயர் மாற்றப்பட்டது.

- 2006ல் உதிதிராஞ்சல் உத்திரகண்ட் என்றும் அதே வருடத்தில் பாண்டிச்சேரி புதுச்சேரி என்றும் பெயர் மாற்றப்பட்டது.
  2011ல் ஒரிஸா ஒடிசா என்று பெயர் மாற்றப்பட்டது.

**State and UTs of India in 1956**

1. Andhra pradesh
2. Assam
3. Bihar
4. Bombay
5. Jammu and Kashmir
6. Kerala
7. Madhya Pradesh
8. Madras
9. Mysore
10. Orissa (Odisha)
11. Punjab
12. Rajasthan
13. Uttar Pradesh
14. West Bengal

**Union Territories - 1956**

1. Andaman and Nicobar Islands
2. Delhi
3. Himachal Pradesh
4. Laccadive, Minicoy and Amindivi Isalands
5. Manipur
6. Tripura

Union Territories and their Year of Formation

| S. No | Union Territories | Year of Formation |
|---|---|---|
| 1 | Andaman and Nicobar Islands | 1956 |
| 2. | Delhi (National Capital Territory) | 1956 |
| 3. | Lakshadweep | 1956 |
| 4. | Puducherry | 1962 |
| 5. | Chandigarh | 1966 |
| 6. | Jammu and Kashmir | 2019 |
| 7. | Ladakh | 2019 |
| 8. | Dadra and Nagar Haveli and Daman and Diu | 2020 |